## ‘சீர்மிகு ஆளுமை’ திட்டத்தின் கீழ்

# ‘விரைவு துலங்கல் குறியீடு’ மென்பொருள் செயலி : முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

## ‘செழிப்பு’ இயற்கை உரத்தை அறிமுகப்படுத்தினார்!

சென்னை, மே 14-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.5.2023) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளில் வசிக்கும் மக்களுக்கு வழங்கப்படும் சேவைக்கான “விரைவு துலங்கல் குறியீடு - QR Code” மென்பொருள் செயலியை தொடங்கி வைத்தார். மேலும், ஈரக்கழிவுகளிலிருந்து தயாரிக்கப்படும் இயற்கை உரத்திற்கு “செழிப்பு” என பெயரிட்டு விற்பனைக்காக அறிமுகப்படுத்தினார்.

தமிழ்நாடு அரசு நிர்வாக செயல்பாடுகளில் டிஜிட்டல் மயமாக்குதல் என்பது வளர்ந்து வரும் தகவல் தொழில் நுட்பத்தின் அடிப்படையில் துறை தோறும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் அரசு நடவடிக்கையில் நம்பகத்தன்மையை அதிகரிக்கும் விதத்தில் டிஜிட்டல் தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி மக்களுக்கான சேவைகளை உறுதிப்படுத்திடவும், வெளிப்படைத்தன்மையோடு தகவல் பரிமாற்றம் செய்து அரசின் நிர்வாக செயல்பாடுகளின் விவரங்களையும் சேவைகளையும் மக்கள் அடைந்திடவும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2022-23ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையில், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பணி மற்றும் சேவைகளை நிகர்நிலையில் கண்காணிக்கவும், பணிகள் குறித்த விபரங்களை மக்கள் தெரிந்து கொள்ளவும், பணி மற்றும் சேவை குறித்த மக்களின் கருத்துக்களை விரைவு துலங்கல் குறியீடு (க்யூஆர் கோடு) போன்ற செயலிகள் மூலம், நிகர்நிலையில் தெரிவித்திடவும் சிறப்பான சீர்மிகு ஆளுமை திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின்படி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தற்போது வலைசெயலி மூலம் நகரில் உள்ள கட்டமைப்புகளை உள்ளடக்கிய வரைபடம் தயாரிக்கப்பட்டு தகவல் தொழில்நுட்ப முறையில் விரைவு துலங்கல் குறியீடு (க்யூஆர் கோடு) ஒவ்வொரு அரசு சார் கட்டமைப்புகள், தனியார் வரிவிதிப்பு கட்டமைப்பிற்கும் உருவாக்கியுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளில் வசிக்கும் மக்களுக்கு வழங்கப்படும் சேவைக்கான “விரைவு துலங்கல் குறியீடு - QR Code” மென்பொருள் செயலியை தொடங்கி வைத்தார்.

இந்த விரைவு துலங்கல் குறியீடு (க்யூஆர் குறியீடு) ஒவ்வொரு கட்டமைப்புகளின் முகப்புகளிலும் பயன்படுத்தத்தக்க வகையில் உள்ளாட்சி ஊழியர்களால் ஒட்டப்படும். இந்த விரைவு துலங்கல் குறியீடு (க்யூஆர் குறியீடு) மூலம் பொதுமக்கள் உள்ளாட்சி சேவைகளின் மீதான நிறைகுறைகளை தெரிவிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால் உள்ளாட்சி ஊழியர்கள் தங்களது பணியினை மேம்படுத்தி மக்களுக்கு திருப்திகரமான சேவைகளை செய்திட வழிவகுக்கும்.

மேலும், சொத்து வரி உள்ளிட்ட அனைத்து வரி நிலுவைகளைப் பற்றிய அறிவிப்பை பெற்று செயலி மூலமே தொகையை செலுத்தலாம். பிறப்பு, இறப்பையும், வீட்டிலிருந்தவாறே விரைவு துலங்கல் குறியீடு (க்யூஆர் குறியீடு) ஸ்கேன் செய்து பதிவு செய்யலாம். இவ்வாறு பெறப்படும் புகார் / கோரிக்கைகள் மீது எடுக்கப்படும் நடவடிக்கை குறித்த விவரங்கள், அவற்றின் நிலைப்பற்றியும் உடனுக்குடன் தெரிந்து கொள்ள முடியும்.

அத்துடன், உள்ளாட்சி கட்டமைப்புகளான, பூங்காக்கள், பேருந்து நிலையங்கள், எரியூட்டு மயானம், மார்க்கெட், விளையாட்டு மைதானம், நகர்நல மையம், கழிப்பறைகள் உள்ளிட்ட பொதுமக்கள் பயன்படுத்தும் அனைத்து இடங்களிலும் பொருத்தப்பட்டுள்ள விரைவு துலங்கல் குறியீடு (க்யூஆர் குறியீடு) மூலம் பொதுமக்கள் தங்களது கருத்துக்களை பதிவு செய்தால் உள்ளாட்சிகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டு அக்கட்டமைப்புகளை மேலும் நல்ல முறையில் மக்கள் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப மேம்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு பொதுமக்கள் விரைவு துலங்கல் குறியீடு (க்யூஆர் குறியீடு) மூலம் தெரிவிக்கும் கோரிக்கைகள் / புகார்கள் அனைத்தும் உள்ளாட்சி அலுவலகத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறையில் ஒருங்கிணைந்த முறையில் பெறப்படும். பின்பு அவை தொடர்புடைய அலுவலர்கள் மூலம் தீர்வு காணப்படுவதால் பொதுமக்களுக்கான சேவைகள் அனைத்தும் இந்த “சீர்மிகு ஆளுமை” திட்டத்தின் மூலம் முழுமையாக செயல்படுத்தப்படும்.

### “செழிப்பு” இயற்கை உரம் விற்பனை

2023-24ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையில், நகர்ப்புரங்களில் சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகள் நுண்ணுரக் கூடங்களில் இயற்கை உரமாக மாற்றப்படுகிறது. தரமான இயற்கை உரத்தை நுகர்வோருக்கு அளிக்கும் பொருட்டு, உரத்தின் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து பகுப்பாய்வு செய்யப்படுகிறது. இவ்வாறு பகுப்பாய்வு செய்யப்பட்ட இயற்கை உரத்தினை “செழிப்பு” என்ற பெயரில் தரக்குறியீடு நிர்ணயம் செய்து அனைத்து நகரங்களிலும் விற்பனை செய்து வருமானம் ஈட்ட வழிவகை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, ஈரக்கழிவுகளிலிருந்து தயாரிக்கப்படும் இயற்கை உரத்திற்கு “செழிப்பு” என பெயரிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் விற்பனைக்காக அறிமுகப்படுத்தினார்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புர உள்ளாட்சிகளிலும் சுமார் 15,000 டன் குப்பை நாளொன்றுக்கு சேகரம் ஆகிறது. இதில் சுமார் 55 சதவீதம் மக்கும் குப்பையாகும். மக்கும் குப்பையிலிருந்து சுமார் 15 சதவீதம் உரமாக பெறப்படுகிறது.

மாநகராட்சிகளில் 629 இடங்களில், நகராட்சிகளில் 334 இடங்களில் மற்றும் பேரூராட்சிகளில் 489 இடங்களிலும் உள்ள நுண் உர மையங்கள் மற்றும் காற்றாடல் மையங்களில் மக்கும் குப்பை அறிவியல் முறையில் செயலாக்கம் செய்யப்பட்டு இயற்கை உரமாக மாற்றப்படுகிறது. இவற்றில் நாள் ஒன்றுக்கு சுமார் 870 மெ.டன் இயற்கை உரம் தயாரிக்கப்பட்டு விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படவுள்ளது.

இந்த உரம் பயன்படுத்தும் பொழுது மண்ணின் காற்றோட்டம் மற்றும் நீரை தேக்கி வைத்துக் கொள்ளும் தன்மை மேம்படுத்தப்படுவதோடு, மண்ணில் இடப்படும் இரசாயன உரத்திலிருந்து சத்துக்களை விடுவிக்கும் தன்மை மற்றும் அதனை பயிர் ஏற்று கொள்ளும் வடிவில் சத்துக்களை மாற்றும் தன்மையும் ஏற்படும்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் கிர்லோஷ் குமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வி. தட்சிணாமூர்த்தி, பேரூராட்சிகளின் இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிர்வாகத் துறை இயக்குநர் பா. பொன்னையா, ஆவடி மாநகராட்சி ஆணையர் க. தர்பகராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




சென்னையில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில், நேற்று முன்தினம் (12.05.2023) புவியியல் மற்றும் சுரங்கத்துறை மாவட்ட அலுவலர்களின் செயல்திறன் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையர் ஜெ.ஜெயகாந்தன், மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தொழிலாளர் துறை சார்ந்த

# அலுவலர்களின் பணித் திறனாய்வுக் கூட்டம்!

## அமைச்சர் சி.வி.கணேசன் தலைமை!

சென்னை, மே 13-

சென்னை, தேனாம்பேட்டை டி.எம்.எஸ், வளாகத்தில் அமைந்துள்ள தொழிலாளர் ஆணையர் அலுவலத்தில், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய கருத்தரங்கு கூடத்தில் தொழிலாளர் துறை சார்ந்த அலுவலர்களுக்கான பணித் திறனாய்வுக் கூட்டம் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன் தலைமையில் நேற்று முன்தினம் (12.5.2023) நடைபெற்றது.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன், பேசுகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசானது, தொழிலாளர்களின் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்யும் வகையிலும், அனைத்து பிரச்சனைகளுக்கு முழுமையாக தீர்வு காணும் நோக்கத்திலும் செயல்படும் அரசாக இருந்து வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இவ்வரசு பொறுப்பேற்ற நாள் முதல் தொழிலாளர்களுக்கு புதிய நலத்திட்டங்களை அறிவித்து தொழிலாளர்களின் நலன் மற்றும் வாழ்க்கைத் திறனை மேம்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகிறது.

மேலும், இக்கூட்டத்தில் தொழிலாளர் ஆணையரக செயல்பாடுகள் குறித்து அமைச்சர் ஆய்வு செய்தார். தொழிலாளர் துறை அலுவலர்கள் மேலும் சிறப்பாக செயல்பட கீழ்காணும் அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை அமைச்சர் வழங்கினார்.

தொழிலாளர் துறையின் கீழ் இயங்கும் 18 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நலத்திட்ட உதவிகள் வாரிய உறுப்பினர்களை விரைவாக சென்று சேர உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார்.

முதலமைச்சர் தலைமையிலான இவ்வரசு அமைப்பு சாரா தொழிலாளர் நலனில் அதிக அக்கறை கொண்டு செயல்படும் அரசு, எனவே தொழிலாளர் துறை அலுவலர்கள் அமைப்புசாரா வாரியங்களில் பெறப்படும் கேட்புமனுக்களின் மீது உடனுக்குடன் தீர்வு காணவும், நிலுவை ஏதுமின்றி செயல்படவும், பதிவு புதுப்பித்தலிலும் நிலுவை இன்றி விரைந்து செயல்படவும் வேண்டும்.

தொழிலாளர் துறையின் செயல்பாடுகளான சமரசப் பணிகள், நீதிசார் பணிகள், சட்ட அமலாக்க பணிகள் போன்ற பணிகள் தொடர்பான நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

தொழில் தகராறுகள் சட்டம், 1947, தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947, குறைந்தபட்ச ஊதிய சட்டம், 1948, பணிக்கொடை பட்டுவாடா சட்டம், 1972, தோட்டத் தொழிலாளர்கள் சட்டம், 1951, சட்டமுறை எடையளவு சட்டம், 2009 மற்றும் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் தொடர்பாக நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

பல்வேறு தொழிலாளர் நல சட்ட அமலாக்க பணிகளை துறை அலுவலர்கள் புகார்களுக்கு இடமளிக்காமல் மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்.

அமலாக்க அலுவலர்கள் ஆய்வின் சமயம் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் உரிய காலத்தில் வழங்கப்படுகிறதா என்பதனை உறுதி செய்ய வேண்டும் என அறிவுறுத்தினார்.

மேலும், ஆய்வின் போது வெளிமாநில தொழிலாளர்கள், தொழிலாளர் துறையின் வலைதளத்தில் தங்களின் விவரங்களை பதிவேற்றம் செய்துள்ளார்களா என்பதனை உறுதி செய்ய அறிவுறுத்தினார்.

31.03.2023 அன்று மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர் தொழிலாளர்களுக்கென மாநில அளவிலான ஆலோசனை குழு மற்றும் மண்டல அளவிலான ஒருங்கிணைப்பு குழு உருவாக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மாநில மற்றும் மண்டல அளவிலான குழு கூட்டங்களை நிர்ணயிக்கப்பட்ட கால இடைவெளிக்குள் நடத்துமாறு அறிவுறுத்தினார்.

சமரச அலுவலர்கள் நாட்டில் தொழில் வளர்ச்சி மேம்படுத்தப்படுவதோடு, தொழிலாளர் நலன் பாதுகாக்கும் வகையிலும் தொழிலாளர் மற்றும் வேலையளிப்போர் இடையே நல்லுறவினை மேம்படுத்தும் வகையிலும் சிறப்பாக செயல்பட அறிவுறுத்தினார்.

மேற்கண்டவாறு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் முதன்மைச் செயலாளர்/தொழிலாளர் ஆணையர் முனைவர். அதுல் ஆனந்த் மற்றும் தொழிலாளர் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம் அரசு மருத்துவக் கல்லூரியில் தமிழக அரசின் இரண்டாண்டு சாதனைகள் மற்றும் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, மாவட்ட ஆட்சித்தலைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி மற்றும் மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், ராஜபாளையம் சட்ட மன்ற உறுப்பினர் தங்கப்பாண்டியன் ஆகியோர் இருந்தனர்.




தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதி வீரபாண்டிய பட்டினம் ஊராட்சி மன்ற நூற்றாண்டு விழா புனித தோமையர் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர் ராதாகிருஷ்ணன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் செந்தில்ராஜ், மாவட்ட ஊராட்சி தலைவர் அ.பிரம்மசக்தி, வீரபாண்டிய பட்டினம் ஊராட்சி மன்ற தலைவர் மூ.எல்லமுத்து, துணைத் தலைவர் ஜெகதீஸ் வி.ராயன், செயலர் திருமதி பட்டுக்கனி, திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியம் துணைத் தலைவர் ரெஜீபர்ட் பர்னாந்து, முன்னாள் மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம் மற்றும் தி.மு.கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## வேலூர் மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில்

# திராவிட மாடல் ஆட்சியின் இரண்டாண்டு சாதனை விளக்க முதற்கட்ட தெருமுனை பிரச்சாரக் கூட்டம்

### மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ அறிவிப்பு



**20.05.2023** - மாலை 4 மணி - வேலூர் ஒன்றியம் - வி.ஏ.அன்பு, தெள்ளூர், மாலை 5 மணி - வேலூர் ஒன்றியம்- வி.ஏ.அன்பு, சேக்கனூர், மாலை 6 மணி - வேலூர் ஒன்றியம், வி.ஏ.அன்பு, குப்பம். மாலை 4 மணி - அணைக்கட்டு மத்திய ஒன்றியம்-த.புவியரசி- திப்பசமுத்திரம், மாலை 5 மணி - த.புவியரசி- கீழ்கிருஷ்ணாவரம். மாலை 6 மணி - அணைக்கட்டு மத்திய ஒன்றியம்- த.புவியரசி- மகமதுபுரம், மாலை4 மணி - வாலாஜா மேற்கு ஒன்றியம் - பெரிய கோட்டீஸ்வரன் -அக்ராவரம், மாலை 4 மணி - குடியாத்தம் கிழக்கு ஒன்றியம்- வேலூர் ரமேஷ்- சின்னசேரி. மாலை 5 மணி - குடியாத்தம் கிழக்கு ஒன்றியம் - வேலூர் ரமேஷ் -கொல்லமங்கலம். மாலை 6 மணி - குடியாத்தம் கிழக்கு ஒன்றியம் - வேலூர் ரமேஷ் - பள்ளிகுப்பம். மாலை 4 மணி - கே.வி.குப்பம் மத்திய ஒன்றியம் - பழ இராஜேந்திர பிரசாத் - வடுகன்தாங்கல். மாலை 5 மணி - கே.வி.குப்பம் மத்திய ஒன்றியம் - பழ இராஜேந்திர பிரசாத்- கவசம்பட்டு. மாலை 6 மணி - கே.வி.குப்பம் மத்திய ஒன்றியம் - பழ இராஜேந்திர பிரசாத்- சோழமூர்

மாலை4மணி-பேர்ணாம்பட்டுமேற்குஒன்றியம்-குடியாத்தம்குமரன்-மாச்சம்பட்டு. மாலை 5 மணி - பேர்ணாம்பட்டு மேற்கு ஒன்றியம்-குடியாத்தம் குமரன் -பாலூர், மாலை 6 மணி - பேர்ணாம்பட்டு மேற்கு ஒன்றியம்- குடியாத்தம் குமரன்-மசிகம்.

மாலை 4 மணி -கணியம்பாடி தெற்கு ஒன்றியம் - கழிஞ்சூர் கண்ணன்-காட்டு புத்தூர், மாலை 5 மணி - காட்பாடி தெற்கு ஒன்றியம்- கழிஞ்சூர் கண்ணன்- நாக நதி, மாலை 4 மணி - காட்பாடி தெற்கு ஒன்றியம்- கு.மொழிமாறன்- விண்ணம் பள்ளி. மாலை 5 மணி - காட்பாடி தெற்கு ஒன்றியம் - கு.மொழிமாறன்-மேல்பாடி. மாலை 6 மணி - காட்பாடி தெற்கு ஒன்றியம்- கு.மொழிமாறன்-மகி மண்டலம்.

**21.05.2023** - மாலை 4 மணி - காட்பாடி வடக்கு ஒன்றியம் வி.ஏ.அன்பு- பொன்னை. மாலை 5 மணி - காட்பாடி வடக்கு ஒன்றியம் வி.ஏ.அன்பு- கே.என்.பாளையம். மாலை 6 மணி காட்பாடி வடக்கு ஒன்றியம் வி.ஏ.அன்பு- மார்த்தாண்டகுப்பம் கூட்ரோடு. மாலை 4 மணி - கீ.வ.குப்பம் கிழக்கு ஒன்றியம்- த.புவியரசி- திருமணி. மாலை 5 மணி- கீ.வ.குப்பம் கிழக்கு ஒன்றியம்- த.புவியரசி- அரும்பாக்கம். மாலை 6 மணி - கீ.வ.குப்பம் கிழக்கு ஒன்றியம்- த.புவியரசி- லத்தேரி. மாலை 4 மணி - காட்பாடி கிழக்கு ஒன்றியம் - த.பாரி-தேனூர். மாலை 5 மணி- காட்பாடி கிழக்கு ஒன்றியம்- த.பாரி-வஞ்சூர். மாலை 4 மணி - குடியாத்தம் தெற்கு ஒன்றியம்- பழராஜேந்திர பிரசாத்- கருணீக சமுத்திரம்.

மாலை 5 மணி - குடியாத்தம் தெற்கு ஒன்றியம்- பழராஜேந்திர பிரசாத்- தோட்டாளம். மாலை 6 மணி - குடியாத்தம் தெற்கு ஒன்றியம் - பழராஜேந்திர பிரசாத் -கீழ்பட்டி. மாலை 4 மணி -குடியாத்தம் நகரம்- பிரம்மபுரம் பழனி- அண்ணா சிலை அருகில். மாலை 5 மணி- குடியாத்தம் நகரம்- பிரம்மபுரம் பழனி- காமாட்சியம்மன் பேட்டை பிள்ளையார் கோயில் தெரு, மாலை 6 மணி - குடியாத்தம் நகரம்- பிரம்மபுரம் பழனி- பிச்சனூர் ஆனைகட்டி கணபதி முதலி தெரு. மாலை 4 மணி - பேர்ணாம்பட்டு நகரம்- குடியாத்தம் குமரன்-சின்ன பஜார். மாலை 5 மணி - பேர்ணாம்பட்டு நகரம்- குடியாத்தம் குமரன்- கலைஞர் நகர். மாலை 6 மணி - பேர்ணாம்பட்டு நகரம்- குடியாத்தம் குமரன்- ரசிதாபாத். மாலை 4 மணி - அணைக்கட்டு கிழக்கு ஒன்றியம் -கு.மொழி மாறன்- விரிஞ்சிபுரம். மாலை 5 மணி - அணைக்கட்டு கிழக்கு ஒன்றியம்- கு.மொழி மாறன்- இறைவன்காடு.

**22.05.2023** - மாலை 4 மணி - காட்பாடி மேற்குஒன்றியம்- த.பாரி- கரசமங்கலம். மாலை 5 மணி - காட்பாடி மேற்குஒன்றியம்- த.பாரி- கரிகிரி. மாலை 6 மணி - காட்பாடி மேற்குஒன்றியம்- த.பாரி -புத்தூர். மாலை 7 மணி - காட்பாடி மேற்குஒன்றியம்- த. பாரி- ஏறதாங்கல். மாலை 8 மணி - காட்பாடி மேற்குஒன்றியம்- த.பாரி- செம்மராய நல்லூர். மாலை 4 மணி - கே.வி.குப்பம் மேற்கு ஒன்றியம்- வேலூர் ரமேஷ்- நாகல். மாலை 5 மணி - கே.வி.குப்பம் மேற்கு ஒன்றியம்- வேலூர் ரமேஷ்- கீழ்ஆலத்தூர். மாலை 4 மணி - குடியாத்தம் வடக்கு ஒன்றியம் - பிரம்மபுரம் பழனி - புட்டவாரிபல்லி. மாலை 5 மணி - குடியாத்தம் வடக்கு ஒன்றியம் - பிரம்மபுரம் பழனி - பரதராமி. மாலை 6 மணி - குடியாத்தம் வடக்கு ஒன்றியம் - பிரம்மபுரம்பழனி- பூஜாரிவலசை. மாலை 4 மணி - பள்ளி கொண்டா பேரூர் - குடியாத்தம் குமரன் - பள்ளிகொண்டா பேருந்து நிலையம். மாலை 5 மணி - பள்ளி கொண்டா பேரூர் - குடியாத்தம் குமரன் - வெட்டுவானம். மாலை 4 மணி - ஒடுக்கத்தூர் பேரூர் -வி.ஏ.அன்பு - ஒடுக்கத்தூர் பேருந்து நிலையம். மாலை 5 மணி - ஒடுக்கத்தூர் பேரூர் -வி.ஏ.அன்பு -ஓராஜாபாளையம். மாலை 4 மணி - பென்னாத்தூர் பேரூர் -சேர்காடு கென்னடி- பென்னாத்தூர் பேருந்து நிலையம். மாலை 5 மணி - பென்னாத்தூர் பேரூர் -சேர்காடு கென்னடி- அடுக்கம் பாறை. மாலை 4 மணி - திருவலம் பேரூர்- த.பாரி- திருவலம் பஜார். மாலை 5 மணி - திருவலம் பேரூர்- த.பாரி- பொன்னை கூட்ரோடு. மாலை 4 மணி - குடியாத்தம் மேற்கு ஒன்றியம்- கழிஞ்சூர் கண்ணன் - சூரானூர். மாலை 5 மணி - குடியாத்தம் மேற்கு ஒன்றியம்- கழிஞ்சூர்கண்ணன்- சின்னாலபல்லி, காந்திநகர். மாலை 4 மணி - பேர்ணாம்பட்டு கிழக்கு ஒன்றியம் - த.புவியரசி- பல்லலகுப்பம்.

மாலை 5 மணி - பேர்ணாம்பட்டு கிழக்கு ஒன்றியம் - த.புவியரசி- கொத்தலபல்லி. மாலை 6 மணி - பேர்ணாம்பட்டு கிழக்கு ஒன்றியம் - த.புவியரசி- ஏறிகுத்தி. மாலை 4 மணி - குடியாத்தம் மேற்கு ஒன்றியம்- பிரம்மபுரம் பழனி- சூராலூர். மாலை 5 மணி - குடியாத்தம் மேற்கு ஒன்றியம்- பிரம்மபுரம் பழனி- சின்னாலபல்லி, காந்திநகர். மாலை 4 மணி - அணைக்கட்டு மேற்கு- பழ இராஜேந்திர பிரசாத்- சேர்பாடி. மாலை 5 மணி - அணைக்கட்டு மேற்கு- பழ இராஜேந்திர பிரசாத் -சின்னதுரை. மாலை 6 மணி - அணைக்கட்டு மேற்கு- பழ இராஜேந்திர பிரசாத் - வரதலம்பட்டு.

மேற்படி அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி நடைபெறஉள்ள தெருமுனை கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர,பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள் தலைமைக் கழக நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில மற்றும் மாவட்ட கழக உள்ளிட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், வட்ட, வார்டு, ஊர்க்கிளை நிர்வாகிகள், முன்னாள் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்துகொண்டு திராவிட மாடல் ஆட்சியின் இரண்டாண்டுகால சாதனையை மக்களிடையே பரப்பிட முன்னெடுத்து செல்ல வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ**
செயலாளர்
வேலூர் மாவட்ட தி.மு.க.